கொடைக்கானல், தேனியில் தொடர் மழை: நீரோடைகளில் நீர்வரத்து

கொடைக்கானல்/பழனி/ தேனி/ போடி, அக். 5: கொடைக்கானலில் பெய்து வரும் தொடர் மழையால் நீரோடைகளில் திங்கள்கிழமை நீர் வரத்து காணப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் கடந்த மூன்று நாள்களாக வெயிலின் தாக்கம் இல்லாமல் காற்று, சாரல் மழை, பனி மூட்டம், பரவலாக மிதமான மழை காணப்பட்டது. இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 2 மணி நேரம் பலத்த மழை பெய்தது. மறுநாள் திங்கள்கிழமை காலை முதலே மேகமூட்டமும், தொடர்ந்து சாரல் மழையும் பெய்தது. பிறகு பிற்பகல் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பரவலாக பலத்த மழை பெய்தது. இதனால் கொடைக்கானல் பகுதிகளிலுள்ள வெள்ளி நீர் அருவி, பாம்பார் அருவி, செண்பகா அருவி, பியர் சோழா அருவி, வட்டக்கானல் அருவி, பெப்பர் அருவி உள்ளிட்டவற்றில் நீண்ட நாள்களுக்குப் பிறகு நீர்வரத்து காணப்பட்டது. கொடைக்கானலில் பரவலாக பெய்த தொடர் மழையால் குளுமையான சீதோஷன நிலை நிலவுகிறது.

அருவிகளில் நிறம் மாறி வரும் மழைநீர்: கொடைக்கானலில் கட்டப்பட்டு வரும் கட்டடக் கழிவுகளை நீரோடைகளில் குவிப்பதால் மழைக் காலங்களில் கழிவுகளுடன் சேர்ந்து மழைநீர் செல்வதால் அருவிகளில் தண்ணீர் நிறம் மாறி வருகிறது. இந்த தண்ணீர் பழனியிலுள்ள ஆறுகளில் கலக்கிறது.

இது அந்தப் பகுதியில் குடிநீராக பயன்படுத்தப்படுகிறது. எனவே நீரோடைகளில் கட்டடக் கழிவுகளை வீசுவோருக்கு அபராதம் விதிக்க நெடுஞ்சாலைத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், நீரோடைகளை பாதுகாக்க வேண்டுமெனவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பழனியில் மழை: பழனியில் பல மாதங்களுக்குப் பிறகு திங்கள்கிழமை சுமார் ஒரு மணி நேரம் சாரல் மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பழனி மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இருந்தாலும் கடந்த சில மாதங்களாக கடும் வெயில் சுட்டெரித்து வந்தது. இந்த நிலையில் திங்கள்கிழமை மாலை மேகங்கள் சூழ்ந்து சாரல் மழை பெய்யத் தொடங்கியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். சுமார் ஒரு மணி நேரம் நீடித்த மழையால் குளிர்ந்த காற்று வீசியது. மழை காரணமாக சாலையில் வாகனங்கள் முகப்பு விளக்கை எரிய விட்டே செல்ல வேண்டிய நிலை இருந்தது. இந்த மழை மரம், செடிகளுக்கு உகந்ததாக இருக்கமென விவசாயிகளும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

தேனி: தேனி மாவட்டத்தில் இரண்டாவது நாளாக திங்கள்கிழமை மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி ஆகிய மாவட்டங்களில் ஞாயிறு, திங்கள் ஆகிய இரு நாள்கள் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதன்படி, தேனி, பெரியகுளம், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்தது. இந்த நிலையில், இரண்டாவது நாளாக தேனி, பெரியகுளம், போடி, கம்பம் பகுதிகளில் மழை பெய்தது.

தேனி மாவட்டத்தில் திங்கள்கிழமை மாலை 6.30 நிலவரப்படி பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்) : லட்சுமிபுரம் - 68, மார்க்கையன்கோட்டை - 38, சுருளியாறு - 31.60, பண்ணைபுரம் - 26, அரண்மனைப்புதூர் - 21.2, தேவதானபட்டி - 18.4, எண்டப்புலி புதுப்பட்டி - 14, மனலாறு அணை - 12.8, மேல கூடலூர் - 12.8, கோம்பைத் தொழு - 10.4, திம்மரசநாயக்கனூர் - 10.4, உப்புக்கோட்டை - 9.6, தேனி - 8.8, உத்தமபாளையம் - 4.4, கம்பம் - 1.2, தேவாரம் - 1.2, போடிநாயக்கனூர் - 0.8, மீனாட்சிபுரம் 0.4.

போடி: போடி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு பெய்த மழையால் போடி ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் அருகே கழிவு நீர் வாய்க்காலில் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் பாய்ந்தது.

இதனால், பக்தர்கள் சிரமத்துக்கு ஆளாகினர். திங்கள்கிழமை மாலை தொடர்ந்து மிதமான மழை பெய்தது. போடி குரங்கணி மலை கிராமங்களிலும் மிதமான மழை பெய்தது.

இதனால் குரங்கணி பகுதியில் கொட்டகுடி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. குரங்கணி நகராட்சி நீர்த்தேக்க அருவி பகுதியில் தண்ணீர் வரத்து அதிகமாக காணப்பட்டது. தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

கொடைக்கானலில் பெய்த தொடர் மழையால் வெள்ளி அருவியில் காணப்பட்ட நீர்வரத்து. (வலது) கொட்டகுடி ஆற்றில் குரங்கணி அருவிப் பகுதியில் ஏற்பட்ட தண்ணீர் பெருக்கு.

புனித மிக்கேல் அதிதூதர் ஆலய தேர்த் திருவிழா

நத்தம், அக். 5: நத்தம் அருகேயுள்ள சமுத்திராப்பட்டியில் அமைந்துள்ள புனித மிக்கேல் அதிதூதர் ஆலய தேர்த் திருவிழா சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த ஆலயத்தின் 28-ஆம் ஆண்டு தேர்த் திருவிழா கடந்த 2-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. மறுநாள் சனிக்கிழமை காலையில் பொங்கல் விழா நடைபெற்றது. பிறகு நத்தம் பங்குத்தந்தை டேனியல், ஆர்.சி. மெட்ரிக். பள்ளி தாளாளர் ஜெரால்டு ஸ்டீபன் செல்வா, ஆர்.சி. சிறுமலர் மேல்நிலைப் பள்ளி தாளாளர் ஜான் பிரிட்டோ ஆகியோர் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றனர். தொடர்ந்து வாண வேடிக்கையுடன் புனித மிக்கேல் அதிதூதரின் மின் அலங்காரத் தேர்ப் பவனி நடைபெற்றது. இதைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை மாலை நற்கருணை ஆசிருடன் கொடியிறக்கம் நடைபெற்றது. இதில் பங்குத்தந்தையர்கள், அருள் சகோதரர்கள், அருள் சகோதரிகள், இறைமக்கள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை ஆலய நிர்வாகத்தினர், இறைமக்கள், ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

சமுத்திராப்பட்டியில் புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத் திருவிழாவையொட்டி நடைபெற்ற தேர்ப்பவனி.

பைக்கிலிருந்து தவறி விழுந்த இளைஞர் உயிரிழப்பு

பழனி, அக். 5: பழனி அருகே இரு சக்கர வாகனத்திலிருந்து தவறி விழுந்த இளைஞர் உயிரிழந்தார்.

பழனி அருகே மருத்துவ நகரைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் சபரிநாதன் (20). இவர் திங்கள்கிழமை கொடைக்கானல் சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்றபோது ஆலமரத்துக்களம் அருகே தவறி கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து பழனி தாலுகா போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை

1100, பெரியகுளம் ரோடு, தேனி - பதிவு எண்.37/75

பழைய பொருட்கள் ஏல விற்பனை அறிவிப்பு

உறவின்முறை நிர்வாகத்தில் இயங்கும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் இதர நிறுவனங்களில் உள்ள பெரிய ஜன்னல்கள், கண்ணாடி பொருட்கள், பிளாஸ்டிக், பித்தளை, எவர்சில்வர் பொருட்கள், இரும்பு, தகரம், காலிசாக்குகள், பரீட்சை பேப்பர், அட்டைகள், அச்சகம் ஜல்லி பேப்பர், நியூஸ் பேப்பர், பஸ் இரும்பு சாமான்கள், பஸ் டயர் மற்றும் e-waste ஆகிய பொருட்கள் தேனி பாரஸ்ட் ரோடு, நாடார் சரசுவதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 12.10.2026, திங்கட்கிழமை காலை 10 மணியளவில் பகிரங்க ஏலம் விடப்படும். ஏலம் எடுக்க விரும்புபவர்கள் ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம்) முன் பணம் செலுத்த வேண்டும்.

விபரங்களுக்கு : 9597486124, 8072101145

M.M.ஆனந்தவேல், M.B.A., பொதுச்செயலாளர்
தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை, தேனி.

கொடைக்கானல் சாலை சுங்கச் சாவடியில் புதிய கட்டண வசூல் முறை: ரத்து செய்ய வலியுறுத்தி எம்.எல்.ஏ. தலைமையில் பேச்சுவார்த்தை

நிலக்கோட்டை, அக். 5: கொடைக்கானல் சாலையில் உள்ள சுங்கச் சாவடியில் புதிய கட்டண வசூல் முறையை ரத்து செய்ய வலியுறுத்தி, உள்ளூர் வாகன ஓட்டிகள் மறியலில் ஈடுபடப் போவதாக அறிவித்திருந்த நிலையில், சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். அய்யனார் தலைமையில் சமாதான பேச்சுவார்த்தை திங்கள்கிழமை நடைபெற்றது.

திண்டுக்கல் - மதுரை நான்கு வழிச் சாலையில் சுங்கச் சாவடி அமைக்கப்பட்டு, கடந்த 20 ஆண்டுகளாக ஒரு தனியார் நிறுவனம் சார்பில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இதனிடையே, அந்த நிறுவனத்தின் ஒப்பந்தக் காலம் நிறைவடைந்ததையடுத்து, கடந்த மாதம் முதல் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சார்பில், சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. இதில் சுங்கச் சாவடிக்கு அருகில் வசிப்போருக்கு தேசிய நெடுஞ்சாலை, சாலை போக்குவரத்துத் துறை சார்பில் உள்ளூர் அனுமதிச் சீட்டுக்கான மாதாந்திர கட்டணம் ரூ.350 எனவும், இதில் மாதத்துக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் சென்று வரலாம் என்ற திட்டம் இருந்து வந்தது. இந்த நிலையில் இந்தத் திட்டத்தை ரத்து செய்து, கட்டணத்தை ரூ.360 ஆக உயர்த்தி மாதத்துக்கு 50 முறை மட்டுமே சென்று வர அனுமதி அளிக்கப்பட்டது.

இதேபோல, கார், ஜீப், வேன் உள்ளிட்ட வாகனங்கள் ஒரு முறைக்கு ரூ. 75, இரண்டு முறைக்கு ரூ. 110 செலுத்த வேண்டும். மேலும், பள்ளிப் பேருந்துகளுக்கு ஒரு முறைக்கு ரூ.260, இரு முறைக்கு ரூ.395 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்தக் கட்டண உயர்வுக்கு உள்ளூர் வாகன ஓட்டிகள், விவசாயிகள், தனியார் நிறுவனத்தினர் எதிர்ப்பு தெரிவித்து வருகிற புதன்கிழமை (அக். 7) சுங்கச் சாவடியில் மறியல் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தனர்.

இதையடுத்து, சுங்கச் சாவடி ஊழியர்களுடன், நிலக்கோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். அய்யனார் தலைமையிலும், அம்மையநாயக்கனூர் போலீஸார் முன்னிலையிலும் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் அம்மையநாயக்கனூர் திமுக பேரூராட்சித் தலைவர் எஸ்.பி.எஸ். செல்வராஜ், வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், விவசாயிகள், வணிகர்கள் கலந்து கொண்டனர். அப்போது, கட்டண குறைப்பு செய்ய இயலாது. இருப்பினும் சுங்கச் சாவடி நிர்வாகத்தின் உயர் அதிகாரிகளிடம் பேசி கட்டண குறைப்புக்கு ஏற்பாடு செய்வதாக தெரிவிக்கப்பட்டது. அப்போது, சுங்கச் சாவடி நிர்வாகத்தினருக்கும், பொதுமக்களுக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாத நிலையில், வருகிற 7-ஆம் தேதி நடைபெறவிருந்த சுங்கச் சாவடி முற்றுகைப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், நிலக்கோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். அய்யனார் தலைமையில் இதற்கான கோரிக்கை மனு காவல் துறையினரிடம் அளிக்கப்பட்டது. அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, வாகன ஓட்டிகள், விவசாயிகள், பொதுமக்கள் அங்கு கூடியதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஆட்சியரிடம் அகமலை கிராம மக்கள் மனு

தேனி, அக். 5: தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், அகமலை கிராமத்துக்கு கட்டடப் பொருள்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் கிராம மக்கள் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

மனு விவரம்: அகமலை ஊராட்சியில் 20-க்கு மேற்பட்ட உள்கிராமங்கள் உள்ளன. இந்த ஊராட்சிக்கு நாங்கள் முறையாக வரி செலுத்தி வருகிறோம். இந்த நிலையில், எங்களது விவசாயப் பொருள்கள், கட்டடப் பொருள்கள், ஜல்லி, கம்பி, செங்கல், மணல் போன்ற பொருள்களை எடுத்துச்செல்லும் போது, வனத்துறையினர் பட்டா, சிட்டா கொடுத்து, ரூ.100 மதிப்பிலான பத்திரத்தில் எழுதிக் கொடுத்த பின் அனுப்பி வருகின்றனர். எனவே, அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், எப்போதும் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும். மேலும், அகமலை சாலை சேதமடைந்த நிலையில் உள்ளது. அந்த சாலையைச் சீரமைக்க வேண்டும். இல்லையென்றால், நாங்கள் பராமரிப்பு செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என அதில் குறிப்பிட்டனர்.

தாய், தங்கையைத் தாக்கியவர் கைது

போடி, அக். 5: போடி அருகே தாய், தங்கையைத் தாக்கி கொலை மிரட்டல் விடுத்த இளைஞரை போலீஸார் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்தனர்.

போடி அருகேயுள்ள வினோபாஜி குடியிருப்பில் வசிப்பவர் நாகலட்சுமி (50). இவரது கணவர் நாகராஜ் 4 மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டார். இவரது இரு மகள்கள் திருமணமாகி வெளியூரில் வசிக்கின்றனர். இளைய மகன் மதன்குமார் (22), மகள் சிவசக்தி ஆகியோருடன் நாகலட்சுமி வசித்து வருகிறார். இந்த நிலையில், மதன்குமார் அடிக்கடி மது அருந்த பணம் கேட்டு தகராறு செய்து வந்தார். ஞாயிற்றுக்கிழமையும் இதேபோல, தகராறு செய்து நாகலட்சுமியையும், சிவசக்தியையும் தாக்கி, வீட்டிலிருந்த அரிவாள்மனையை எடுத்துக் காண்பித்து கொலை மிரட்டல் விடுத்தாராம். இதுகுறித்து போடி ஊரகக் காவல் நிலையப் போலீஸார் பெண்கள் மீதான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து அவரைக் கைது செய்தனர்.

பொது அறிவிப்பு

திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை வட்டம், ஆலம்பாடி கிராமம், சர்வே எண்கள் 911/1A1, 911/1B1, 913/1A1 (பகுதி, & 913/1B1 (பகுதி)-ல் அமைந்துள்ள 2.81.5 ஹெக்டேர் பரப்பளவிலான Multi Colour கிரானைட் குவாரி (Multi Colour Granite Quarry) திட்டத்திற்கு, தமிழ்நாடு மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தால் (SEIAA, Tamil Nadu) சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) வழங்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் அனுமதி எண். (EC Identification No.) : EC25B0108TN5167063N. SIA/TN/MIN/555771/2025. ஆணை நாள் : 24.03.2026

M/s. S.G. Granites
எஸ்.பி. சோலைசாமி,
S/o. சி.சுப்பையா,
எண். 607, கே.கே. நகர்,
மதுரை வடக்கு தாலுகா, மதுரை மாவட்டம்.

DBS

பாதுகாப்பு பெட்டகத்தை திறப்பது குறித்த அறிவிப்பு

25C, ரயில்வே ஃபீடர் சாலை, பழனி, தமிழ்நாடு, இந்தியா - 624601 என்ற முகவரியில் வசிக்கும் **திரு. ராஜ்குமார் S T** ("**பாதுகாப்பு பெட்டக வாடகைதாரர்**") பாதுகாப்பு பெட்டகம் எண்: **யூனிட் 1 - லாக்கர் 9**-ஐ ("**பாதுகாப்பு பெட்டகம்**") **05 டிசம்பர் 1996** அன்று டிபிஎஸ் பேங்க் இந்தியா லிமிடெட்டின் **பழனி** கிளையில் ("**வங்கி**") வாடகைக்கு எடுத்திருந்தார் என்பதை பொது மக்களின் தகவலுக்காக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பாதுகாப்பு பெட்டகம் 7 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் உள்ளது, மேலும் அந்த பாதுகாப்பு பெட்டகம் பயன்படுத்தப்படாததற்கான காரணத்தை சரிபார்க்க, வங்கி பல நினைவூட்டல் கடிதங்கள் பாதுகாப்பு பெட்டக வாடகைதாரருக்கு அனுப்பியுள்ளது, ஆனால் இன்றுவரை, வாடகைதாரரிடமிருந்து வங்கிக்கு எந்த பதிலும் அனுப்பப்படவில்லை.

பாதுகாப்பு பெட்டகம் குறித்து இந்திய ரிசர்வ் வங்கியின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, மேற்குறிப்பிட்ட பாதுகாப்பு பெட்டகத்தை திறக்கும் நடவடிக்கையை வங்கி துவக்க இருக்கிறது. இந்தப் பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்களின் மேல் எந்த நபராவது ஏதேனும் உரிமை கோர வேண்டுமெனில், இந்த அறிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் எங்களது **பழனி** வங்கிக்கிளையை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். இந்தக் காலக்கெடுவுக்குள் வாடகைதாரரிடமிருந்து வங்கிக்கு எந்த உரிமைக் கோரலோ, அல்லது எந்தத் தகவலும் பெறப்படவில்லையென்றால், குறிப்பிட்ட பாதுகாப்பு பெட்டகத்தைத் திறக்கும் நடவடிக்கையை வங்கி செயல்படுத்தும். பாதுகாப்பு பெட்டகம் திறக்கப்படுவதற்கும், அந்த பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள பொருட்களை அப்புறப்படுத்துவதற்கும், பெட்டக வாடகைதாரர் அல்லது வேறு எந்த நபருக்கும் வங்கி பொறுப்பாகாது.

டிபிஎஸ் பேங்க் இந்தியா லிமிடெட்டின் சார்பாக,
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

உடனடிச் செய்திகள்
சூடாக சுருக்கமாக...
www.dinamani.com

SMFG Grihashakti

SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம் - 503 & 504, 5 வது தளம், G-பிளாக், இன்ஸ்பயர் BKC, BKC பிரதான சாலை, பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை - 400 051
பதிவு அலுவலகம் - கன்ஷோன் IT பார்க், டவர் 5, 1 வது தளம், எண். 111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை - 600 116 தமிழ்நாடு

அசையா சொத்துக்கான சுவாதீன அறிவிப்பு (பிற்சேர்க்கை IV) (விதி 8(1))

இப்படம், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - என்ற ஒரு வீட்டு வசதி நிதி நிறுவனத்தின், (தேசிய வீட்டுவசதி வங்கியில் (முற்றிலும் இந்திய ரிசர்வ் வங்கிக்கு சொந்தமானது) முறையாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம்) (இனிமேற்கொண்டு "SMHFC" என்றே அழைக்கப்படும்) பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) ன் கீழான அதிகாரப்பூர்வ அலுவலராகவும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 3 ன் கீழ் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தினை செயலுறுத்தியும், இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட கடன்தாரர்களுக்கு மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(2) ன் கீழ், இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட தேதிய கோரிக்கை அறிவிப்பை அனுப்பியமைத்து, அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மற்றும் இதன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகையை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரினார். கடன்தாரர்கள் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்துக்களை மேற்சொன்ன 'சட்டத்தின் பிரிவு 13 உட்பிரிவு (4) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 ன் படி, தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி, இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட தேதியன்று சுவாதீனம் எடுத்துள்ளார். குறிப்பாக இதன் மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர், மேற்சொன்ன சொத்துக்களுடன் எந்தவொரு விவகாரமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு அச்சொத்துக்களின் மீது ஏற்படுத்தப்படும் எவ்விதமான விவகாரமும், SMHFC - க்கு செலுத்தப்பட வேண்டிய இதன் மேற்குறிப்பிடப்பட்ட நிலுவைத்தொகை மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது.

வ. எண்	கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் பெயர் & கடன் கணக்கு எண்	ஜாமீன் சொத்துக்கள் விபரம் (அசையா சொத்து)	கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை	சுவாதீன தேதி
1	LAN :- 604107210640676 1. பாலகிருஷ்ணன் M 2. ப்ரியா B 3. முத்தையா K 4. வெங்கடேஷ் J 5. M/s. சீனிவாசா ஆட்டோ கன்சல்டிங்	திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சார்பதிவு மாவட்டம், ஒட்டன்சத்திரம் தாலுக்கா & கிராமம், பழைய சர்வே எண். 194/3 ல் அமையப்பெற்ற கிழமேல் வடக்கு புறம் 35 அடி., தெற்கு புறம் 33 அடி., தென்வடல் மேற்கு புறம் 58 அடி., கிழக்கு புறம் 51 அடி., என மொத்த பரப்பு 1853 சதுர அடி மற்றும் அதனுடன் கூடிய கட்டிடம்., இதன் கதவு எண். 251/13, 251B1, 251B2/13. எல்லைகளாவன பின்வருமாறு - புதிய சர்வே எண். 194/3B1A1. வடக்கு - லோகு பிள்ளைக்கு சொந்தமான சொத்து, கிழக்கு - தங்கவேல் ஆசாரிக்கு சொந்தமான சொத்து, தெற்கு - கிழமேல் சந்து, மேற்கு - ராஜூ ஆசாரிக்கு சொந்தமான சொத்து. புதிய சர்வே எண் : 194/3B1A1 (இணைக்கப்பட்டுள்ள வருவாய் ஆவணத்தில் கண்டவாறு)	22.07.2026 09.07.2026 ம் தேதியின் படி, ரூ. 30,99,418.16/- (ரூபாய். முப்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து நானூற்று பதினெட்டு மற்றும் பைசா பதினாறு மட்டும்)	01.10.2026
2	LAN :- 604139511961290 1. சதீஷ் பாண்டியன் ராமகிருஷ்ணன் 2. கலைவாணி ராமகிருஷ்ணன்	திண்டுக்கல் பதிவு மாவட்டம், சாணார்பட்டி சார்பதிவு அலுவலகம், திண்டுக்கல் கிழக்கு தாலுக்கா, அவிலிபட்டி கிராமம், பெருமாபூர் உற்கட்டில், பழைய கிராம நத்தம் சர்வே எண். 129/1 ல் அமையப்பெற்ற இடம் மற்றும் கட்டிடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன பின்வருமாறு - கிழக்கு - தெள்வடல் பாதை, மேற்கு - பஞ்சாட்சரம், த/பெ அரசப்ப பிள்ளைக்கு சொந்தமான வீடு, தெற்கு - ராமசாமிக்கு சொந்தமான இடம், வடக்கு - கிழமேல் தெரு. அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் 17.25 அடி., கிழமேல் தெற்கு புறம் 17.25 அடி., தென்வடல் கிழக்கு புறம் 31.20 அடி., தென்வடல் மேற்கு புறம் 31.20 அடி., என மொத்த பரப்பு 538 சதுர அடி. 50 சதுர மீட்டர் காலி இடம். கிழமேல் 17 அடி., தென்வடல் 30 அடி., என மொத்தம் 510 சதுர அடி அதாவது 47.38 சதுர மீட்டர் பரப்பில் மனைக் கவர் கொண்ட ஓட்டுவில்லை வீடு 1, அதனுடன் கூடிய மின் இணைப்பு, மின் இணைப்பு எண். 54, அனைத்து இதர உடைமைகள், வழி வசதி உரிமைகள் மற்றும் பாதை உரிமைகள். இச்சொத்து புதிய கிராம நத்தம் சர்வே எண். 425/27 ல் அமைந்துள்ளது. இச்சொத்து சாணார்பட்டி பஞ்சாயத்து ஒன்றிய எல்லைக்குள் அமைந்துள்ளது.	22.07.2026 09.07.2026 ம் தேதியின் படி, ரூ. 7,05,388.24/- (ரூபாய். ஏழு இலட்சத்து ஐந்தாயிரத்து முன்னூற்று எண்பத்து எட்டு மற்றும் பைசா இருபத்து நான்கு மட்டும்)	01.10.2026
3	LAN :- 604139211021197 & 604139511068050 1. சுரேஷ் துரை 2. அழகம்மாள் அழகு 3. துரை மாகாளி 4. பூங்கோதை துரை	திண்டுக்கல் பதிவு மாவட்டம், செந்துறை சார்பதிவு மாவட்டம், பிள்ளையார்நத்தம் பஞ்சாயத்து, பிள்ளையார்நத்தம் கிராமம், பழைய நத்தம் சர்வே எண். 64, புதிய நத்தம் சர்வே எண். 609/23 ல் அமையப்பெற்ற 90 சதுர மீட்டர். எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு - வட்ட கிணறு மற்றும் காலி சைட், கிழக்கு - காலி சைட், தெற்கு - காலி சைட், மேற்கு - அழகருக்கு சொந்தமான வீடு. அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் 10.6 மீட்டர்., தெற்கு புறம் 10.6 மீட்டர்., தென்வடல் மேற்கு புறம் 8.6 மீட்டர்., கிழக்கு புறம் 9 மீட்டர்.	22.07.2026 09.07.2026 ம் தேதியின் படி, ரூ. 9,45,770.79/- (ரூபாய். ஒன்பது இலட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து எழுநூற்று எழுபது மற்றும் பைசா எழுபத்து ஒன்பது மட்டும்)	01.10.2026

தேதி : 01.10.2026
இடம் : திண்டுக்கல், தமிழ்நாடு

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

Shanthi Gears

சாந்தி கியர்ஸ் லிமிடெட்

CIN: L29130TZ1972PLC000649
பதிவு அலுவலகம் 304-ஏ, திருச்சி சாலை, சிங்காநல்லூர், கோயம்புத்தூர்-641 005.
தொலைபேசி எண்: 0422-4545745, மின்னஞ்சல்: waltervasanthpj@shanthigears.murugappa.com
Website: www.shanthigears.com

காகித வடிவிலான பங்கு பத்திரங்களின் பரிமாற்றம் மற்றும் டீமேட் செய்வதற்கான சிறப்புச் சாளரம் குறித்த அறிவிப்பு

செக்யூரிட்டிஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (செபி), 2026 ஜனவரி 30 தேதியிட்ட தனது அறிவிப்பிற்கு இணங்க, ஏப்ரல் 1, 2019 முதல் காகித வடிவிலான பங்குகளின் பரிமாற்றத்தை நிறுத்தியிருந்தது. இருப்பினும், ஏப்ரல் 1, 2019-க்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு, ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக திருப்பி அனுப்பப்பட்ட காகித வடிவிலான பங்கு பரிமாற்றக் கோரிக்கைகளை மீண்டும் சமர்ப்பிப்பதற்காக, ஜூலை 7, 2025 முதல் ஜனவரி 6, 2026 வரை ஒரு சிறப்புச் சாளரத்தை செபி அனுமதித்திருந்தது.

முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு, காகித வடிவிலான பத்திரங்களின் பரிமாற்றம் மற்றும் டீமேட் கோரிக்கைகளை மீண்டும் சமர்ப்பிப்பதற்காக, **பிப்ரவரி 5, 2026 முதல் பிப்ரவரி 4, 2027** வரையிலான ஓராண்டு காலத்திற்கு மற்றொரு சிறப்புச் சாளரத்தை செபி தற்போது அனுமதித்துள்ளது. இந்த வசதியானது, ஏப்ரல் 1, 2019-க்கு முன்னதாக **சாந்தி கியர்ஸ்** லிமிடெட் (நிறுவனம்) பங்குகளை காகித வடிவில் வாங்கிய அல்லது வைத்திருக்கும் முதலீட்டாளர்களுக்கு இந்த வசதி கிடைக்கும்.

பரிமாற்றப் பத்திரம் நிறைவேற்றப்பட்ட தேதி	ஏப்ரல் 01, 2019க்கு முன் பரிமாற்றத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டதா?	அசல் பத்திரச் சான்றிதழ் உள்ளதா?	தற்போதைய சாளரத்தில் சமர்ப்பிக்கத் தகுதியுள்ளதா?
ஏப்ரல் 01, 2019க்கு முன்	இல்லை (இது புதிதாகச் சமர்ப்பிக்கப்படுவது)	ஆம்	✓
ஏப்ரல் 01, 2019க்கு முன்	ஆம் (இது முன்பு நிராகரிக்கப்பட்டது/ திருப்பி அனுப்பப்பட்டது)	ஆம்	✓
ஏப்ரல் 01, 2019க்கு முன்	ஆம்	இல்லை	x
ஏப்ரல் 01, 2019க்கு முன்	இல்லை	இல்லை	x

மேலும், பின்வருபவை இந்தச் சாளரத்தின் கீழ் பரிசீலிக்கப்பட மாட்டாது:
- மாற்றுபவருக்கும் பெறுபவருக்கும் இடையேயான பிரச்சினைகளை உள்ளடக்கியவை
- முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்ட பத்திரங்கள்.

இத்தகைய முதலீட்டாளர்கள் தங்கள் பரிமாற்றக் கோரிக்கையை தேவையான ஆவணங்களுடன் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான (RTA) MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (முந்தைய பெயர்: லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்), சூர்யா, 35, மேஃப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்புறம், சவுரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் 641028, தமிழ்நாடு, இந்தியா தொலைபேசி: +91 422 4958995, 2539835-36, மின்னஞ்சல்: coimbatore@in.mpms.mufg.com என்ற முகவரியில் மேலே குறிப்பிட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்கலாம்.

மேற்கூறிய சுற்றறிக்கையின்படி, மேற்கண்ட காலக்கட்டத்தில் முறையாகச் சரிசெய்யப்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்படும் அனைத்துப் பரிமாற்றக் கோரிக்கைகளும் பரிமாற்றம்– மற்றும் – டீமேட் முறையின் மூலம் மட்டுமே செயல்படுத்தப்படும்; அதாவது, பரிமாற்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு பங்குகள் டிமெட்டீரியலைஸ் செய்யப்பட்ட டீமேட் வடிவத்தில் மட்டுமே வழங்கப்படும், மேலும் அவை ஒரு வருட லாக்-இன் காலத்திற்கு உட்பட்டிருக்கும் என்றும் பங்குதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. எனவே, இந்தச் சாளரத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் பங்குதாரர்கள் (சமர்ப்பிப்பவர்கள்) கண்டிப்பாக ஒரு டீமேட் கணக்கை வைத்திருக்க வேண்டும், மேலும் பரிமாற்றத்திற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்போது, பரிமாற்ற ஆவணங்கள், அசல் பங்குச் சான்றிதழ்(கள்) மற்றும் சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள பிற தேவையான ஆவணங்களுடன் 'கிளையன்ட் மாஸ்டர் லிஸ்ட்' என்பதையும் வழங்க வேண்டும். இதற்கு முன்பு பரிமாற்றக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்து, ஆவணக் குறைபாடுகள் நிலுவையில் உள்ள காரணத்தால் இன்னும் தங்களது பரிமாற்றப் பங்குகளைப் பெறாத அனைத்துப் பங்குதாரர்களும் தங்களது நலனுக்காக இந்தச் சிறப்புச் சாளரத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு: அனைத்து பங்குதாரர்களும் தங்கள் தற்போதைய மின்னஞ்சல் முகவரியை நிறுவனம் /RTA/டெபொசிட்டரி பங்கேற்பாளர்களுடன் பதியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சாந்தி கியர்ஸ் லிமிடெட்டுக்காக
வால்டர் வசந்த் பி ஜோ
நிறுவன செயலாளர்

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 06 அக்டோபர், 2026

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
India's International Bank
119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா

கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை) : லோட்டஸ் சென்டர்,
3வது தளம், எண்.4312/13D, VP ரத்தினசாமி ரோடு, மதுரை – 625 014, போன் : 0452–2602200,
மின்னஞ்சல் : sarmdr@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ரொடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1. திரு.S.ஹாரிஸ் அப்துல் காதர் (கடன்தாரர்), த/பெ.திரு.S.ஷாஜகான், கதவு எண்.25/68, அன்சாரி நகர், 1வது வீதி, மெஹபூப்பாளையம், மதுரை – 625 010. 2. திரு.S.ஷாஜஹான் (சார்–கடன்தாரர் மற்றும் அடமானதாரர்), த/பெ.திரு.ஷேக் அப்துல் காதர், கதவு எண்.25/68, அன்சாரி நகர், 1வது வீதி, மெஹபூப்பாளையம், மதுரை – 625 010.	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி சார் பதிவு மாவட்டம், தேனி தாலுகா, அல்லிநகரம் கிராமம், அல்லிநகரம் நகராட்சி, தேனி டவுன், சஹாப் ராவுத்தர் வீதி, அயன் சர்வே எண்.482/B6B, இதிலடங்கியதும் அதன் பகுதியான குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிட சொத்தின், மொத்தமுள்ள 26 சென்டில் வட மேற்குப் பகுதியிலுள்ள மொத்தம் 1047.25 சதுரடியில் தென்புற மற்றும் மேற்புற பகுதி 662.25 சதுரடி காலி வீட்டு மனை, மற்றும் வீடு– பழைய வார்டு எண்.19, உள்ள வார்டு எண்.29, கதவு எண்.11 கொண்ட வீட்டின் வரி விதிப்பு எண்.19309. **எல்லைகள் விபரம் :** மேற்கு – திரு.ஹமீதுல்லா மற்றும் திரு.S.ஷாஜஹானின் வீடு மற்றும் பொதுச் சந்து, தெற்கு – தென்வடல் 3 அடி அகல கிழமேல் பொதுச் சந்து, கிழக்கு – ஹாஜி S.முகமது கனி மற்றும் S. ஹக்கீம் ஆகியோரின் வீடுகள் மற்றும் தென்வடல் பொதுச் சுவர், வடக்கு – தென்வடல் 8.5 அடி அகல மற்றும் கிழமேல் 191 அடி நீளம். இவ்வெல்லைகளுக்கிடையில், **அளவுகளாக,** கிழமேல் 6¼ அடி, தென்வடல் 18 அடி, மொத்தம் 121.5 சதுரடி, மண்சுவர் மற்றும் செங்கலால் கட்டப்பட்டு ஜிங்க் கூரையிட்டு முதல் பிளாக்கிலுள்ள வீடு மற்றும் கிழமேல் 9.25 அடி, தென்வடல் 9 அடி என மொத்தம் 83.25 சதுரடி தார்சுக் கூரைக் கட்டிடம், மண்ணும், செங்கற்களும் கொண்டு கட்டப்பட்ட சுவருடன் இரண்டாம் பிளாக்கிலுள்ளது மேலும் கிழமேல் வடபுறம் 9.25 அடி, தென்புறம் 8¾ அடி, தென்வடல் 17.5 அடி என மொத்தம் 157.5 சதுரடி தார்சுக் கூரையிட்ட கட்டிடம், மண்ணும் செங்கற்களிலும் கட்டப்பட்ட சுவருடன் மூன்றாம் பிளாக்கிலுள்ளது, மற்றும் கிழமேல் 16 அடி, தென்வடல் 18¾ அடி, மொத்தம் 300 சதுரடி கொண்ட நான்காம் பிளாக்கிலுள்ள தார்சுக் கூரைக் கட்டிடம். மேற்குறிப்பிட்ட 1 முதல் 4 பிளாக்குகளிலுள்ள மொத்தம் 662.25 சதுரடி ஜிங்க் தார்சுக் கூரை வடபுறம் பார்த்த கட்டிடம், கதவுகள், சன்னல்கள், முன்வாசல் சிறப்புக் கட்டுமானங்களுடன். மேற்படி வீட்டின் நிறுவப்பட்டுள்ள மின்சார இணைப்பின் சர்வீஸ் இணைப்பு எண்.501–002–240 மேலும் W.C.எண்.8908 ல் குடிநீர் வசதியும் செய்யப்பட்டது. இச்சொத்து லேட்.S.ஷேக் அப்துல் காதர் மகன் திரு.S.ஷாஜஹான் பெயரில் உள்ளது. **வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL** **GPS ஒருங்கிணைப்புகள் (இருப்பிடக் குறிப்பிற்காக) : அட்சரேகை : 10.009118, தீர்க்கரேகை : 77.475739** **Property ID in BAANKNET Portal : BARB602820250005**	05.10.2026 தேதியன்று, ரூ.76,15,005/– (ரூபாய் எழுபத்து ஆறு லட்சத்து பதினைந்தாயிரத்து ஐந்து மட்டும்) முழுத் தொகையையும் செலுத்தும் நாள்வரை, பொருந்தும்படியான வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் சேர்த்து	28.10.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.16,60,000/– (ரூபாய் பதினாறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) 2. ரூ.1,66,000/–(ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து ஆறாயிரம் மட்டும்) 3. ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)	கொள்நிலை (Physical) சுவாதீனம்	26.10.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://bankofbaroda.bank.in/e-auction மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : 0452–2602200, மொபைல் எண்.9790247824; என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 05.10.2026 / இடம் : மதுரை

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி) / பேங்க் ஆஃப் பரோடா